# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி: 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 54 / 2021 நாள்: 22.10.2021

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் 22.10.2021 அன்று நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சாதாரண தேர்தல்கள் நடைபெறவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு வாக்காளர் பட்டியல் தயாரித்தல் குறித்து மாநில அளவிலான முதன்மை பயிற்றுநர்களுக்கான (Master Trainers) பயிற்சி வகுப்புகள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் மற்றும் தேசிய தகவலியல் மைய (NIC) அலுவலர்களால் நடத்தப்பட்டது.**

தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சாதாரண தேர்தல்கள் நடைபெறவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு வார்டுவாரியான புகைப்பட வாக்காளர் பட்டியல்களை சட்டமன்ற வாக்காளர் பட்டியலின்படி தயார் செய்யவும், புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் (online) மாநில அளவிலான முதன்மை பயிற்றுநர்களுக்கான (Master Trainers) பயிற்சி வகுப்புகள், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் மற்றும் தேசிய தகவலியல் மைய (NIC) அலுவலர்களால் 22.10.2021 அன்று முற்பகல் 10.30 மணிக்கு மாநகராட்சி அலுவலர்களுக்கும், பிற்பகல் 2.30 மணிக்கு நகராட்சி அலுவலர்களுக்கும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்ட அரங்கில் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு. க. அருண்மணி, முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு.தனலட்சுமி, உதவி ஆணையர் (தேர்தல்) திரு அகஸ்ரீ சம்பத்குமார், தேசிய தகவலியல் மைய முதன்மை தொழில்நுட்ப இயக்குநர் திரு கே. ஜெயபாலன், முதன்மை கணினி ஆய்வாளர் திரு கே.கே. சிவபிரசாத் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

22/10/2021

மக்கள் தொடர்பு அலுவலருக்காக